DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SANKARANKOVIL.

Calender ---

Miscellaneous Preliminary Register --- MC No. 17/2023

Deposition of witness for

Sessions : PW 1

Name : சாந்தி
Father's Name :

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

18.06.2025.

( Respondent absent Petition U/s 317 Cr.P.C. filed and allowed.)

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் என்ன பரிகாரம் கேட்டு நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் ஜீவனாம்சம் கோரி தாக்கல் செய்துள்ளேன். நான் தற்போது எந்த ஊரில் குடியிருந்து வருகிறேன் என்றால் சங்கரன்கோவிலில் குடியிருந்து வருகிறேன். எனக்கு எப்போது திருமணமானது என்றால் 05.09.2016 ம்தேதி திருமணம் நடைபெற்றது. திருமணத்தின்போது எனக்கு எவ்வளவு நகை போட்டார்கள் என்றால் 15 பவுன் நகை போட்டார்கள். சீர்வரிசை பொருட்களாக என்னென்ன கொண்டு வந்தோம் என்றால் பீரோ, கட்டில், பாத்திரங்கள் கொண்டு வந்தோம். திருமணம்

முடிந்து எந்த ஊரில் குடியிருந்தோம் என்றால் வீராணம் ஊரில் இருந்தோம். திருமணத்தின் பயனாக எனக்கு 2 பெண் குழந்தைகள் உள்ளனர் என்றால் சரிதான். நான் தற்போது என்ன வேலை செய்கிறேன் என்றால் முதுகலை ஆசிரியராக வேலை செய்கிறேன். தற்போது எங்கு வேலை செய்கிறேன் என்றால் சங்கரன்கோவில் அரசு மகளிர் மேல் நிலைப்பள்ளியில் பணியாற்றி வருகிறேன். எனது கணவருக்கு சொந்த ஊர் வடக்கு அச்சம்பட்டி என்றால் சரிதான். எனக்கு சொந்த ஊர் காடுவெட்டி என்றால் சரிதான். எனது கணவர் சங்கரன்கோவில் அரசு மருத்துவமனையில் செவிலியராக பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். நானும் எதிர் மனுதாரரும் அரசு வேலை செய்கிறோம் என்றால் சரிதான்.

எனது மாதச்சம்பளம் எவ்வளவு என்றால் ரூ.70,000/- ஆகும். எனது கணவருக்கு மாதச்சம்பளம் எவ்ளவவு என்று எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு நன்செய், புன்செய் உள்ளது என்பதற்கு நீதிமன்றத்தில் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் அரசு பள்ளியில் ஆசிரியராக இருப்பதால் எதிர் மனுதாரரை எனது இஷ்டம் போல் நடந்து கொள்ள வேண்டும் என்று என்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அரசு ஆசிரியராக இருப்பதாலும், போதிய வருமானம் இருப்பதாலும் எதிர் மனுதாரரை வேண்டுமென்றே புறக்கணித்து வருகிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் கடனுக்காக பிடித்தம் போக மாதம் ரூ.20,000/- தான் சம்பளமாக பெறுகிறார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் பெறும் சம்பளம் அவருடைய அம்மா மற்றும் எதிர்மனுதாரருக்கு உணவு, உடை, இருப்பிடம் மற்றும் மருத்துவசெலவிற்கு மட்டுமே போதுமானதாக உள்ளது என்றால் சரியல்ல. எனக்கு பிடித்தம் போது மாதம்ரூ.70,000/- சம்பளம் என்றால் சரியல்ல. மொத்த சம்பளம் ரூ.70,000/- ஆகம்.அதில் தனிக்கடனுக்காக ரூ.30,000/- யும் பிடித்தம் போக மீதம் ரூ.40,000/- கையில் கிடைக்கும். மாதம் ரூ.30,000/- பிடிப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பெறும் ரூ.70,000/- எனக்கும் எனது குழந்தைகளின் செலவிற்கும் போதுமானது என்றால் சரியல்ல.

எனது நகைகளை சிட்டி யூனியன் வங்கியில் எதிர்மனுதாரர் அடமானம் வைத்ததற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். எதிர் மனுதாரர் என்னுடன் எந்த காலத்திலும் பிரச்சினை செய்தது இல்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் ஆன்லைனில் மோசடி செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை விட நான் அதிக சம்பளம்

வாங்குவதால் ஈகோ பிரச்சினை காரணமாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழ தயராக உள்ளார் என்றால் சரியல்ல. நான் தான் எதிர்மனுதாரரை புறக்கணித்து வருகிறேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரை பழிவாங்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் அதிகப்படியான ஜீவனாம்சம் கோருகிறேன் என்றால் சரியல்ல. நான் அதிகப்படியான ஜீவனாம்சம் கேட்பதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.